நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.
முன்னிலை-திரு.து.ஹரிராம், பி.காம்., பி.எல்.,
நீதித்துறை நடுவர், திருவையாறு.

வாக்குமூலம்
**திருவையாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**

C.C. No. 228/2021
வழக்கு சாட்சி - **அ.சா.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | ராஜாங்கம் | : | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | துரைசாமி | : | தொழில் | விவசாயி |
| கிராமம் | சுக்காம்பார் | : | சமயம் | |
| தாலுக்கா | | : | வயது | 42/2023 |

( எதிரி ஆஜர். )

**நாள் : 13.04.2023**

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் சுக்காம்பார் ஊரில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். இவ்வழக்கில் இறந்துபோன துரைசாமி எனது தந்தை ஆவார். 21.12.2018 அன்று காலை 06.15 மணியளவில் நான் சுக்காம்பாரில் உள்ள ஆற்றுக்கு சென்றுகொண்டிருந்தபோது, நண்பர் ஒருவரை சந்தித்து பேசிக்கொண்டிருந்தேன். என் தந்தை எனக்கு முன்னால் நடந்து சென்று கொண்டிருந்தார். என் தந்தை கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்றுகொண்டிருந்தார். அப்போது சத்தம்கேட்டு நானும், எனது நண்பரும் திரும்பி பார்த்தபோது, எனது அப்பா மீது இந்திராகாந்தி கல்லூரி வேன் மோதி என் தந்தை அடிபட்டு கிடந்தார். நான் அருகில் சென்று பார்த்தபோது எனது தந்தைக்கு காதிலும், மூக்கிலும் இரத்தம் வந்தது. உடனே நான் ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து, என் அப்பாவை Srirangam அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு என் அப்பாவை மருத்துவர்கள் பரிசோதனை செய்து பார்த்துவிட்டு இறந்தவிட்டதாக கூறினார்கள். பின்னிட்டு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார்மனு நான் அளித்ததுதான். **அந்த புகார்மனு அ.சா.ஆ.1/அ.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னை தோகூர் போலிசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** - இந்த விபத்தானது நானும், எனது நண்பர் ராஜகேசரும் பேசிக்கொண்டிருக்கும்போது ஏற்பட்ட விபத்து என்றால் சரிதான். நாங்கள் ரோட்டின் வடதிசையில் நின்று பேசிக்கொண்டிருந்தோம் என்றால் சரிதான். விபத்து நடந்தது ரோட்டின் தென் திசை என்றால் சரிதான். ரோட்டின் வடக்குபுறம்தான் சுக்காம்பார் ஊர் என்றால் சரிதான். ஆற்றிற்கு செல்ல வேண்டும் என்றால் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி கடந்துதான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். புகாரை யார் எழுதினார்கள் என்றால் ஊர்க்காரர் எழுதினார். நான் கொடுத்த

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.
முன்னிலை-திரு.து.ஹரிராம், பி.காம்., பி.எல்.,
நீதித்துறை நடுவர், திருவையாறு.

புகாரில் வெள்ளை நிற மையினால் அழித்து எழுதியது யார் என்று தெரியாது என்றால் சரிதான். சத்தம் கேட்டு நான் ஓடிப்போய் சென்று பார்த்தபோது எனது அப்பா அடிபட்டு கீழே கிடந்தார் என்றால் சரிதான்.

2) எதிரியை போலிசார் அடையாளம் காட்டியதால்தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். இந்த விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், போலிசார் ஜோடித்து எழுதிய புகாரில் கையெழுத்து செய்து, பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.

ஒம்/-து.ஹரிராம்,
நீதித்துறை நடுவர்,
திருவையாறு.